ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2251/42 - 2021 ඔක්තෝබර් මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.10.28
*2251/42 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

***1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டம்***

*1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 68 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10 (இ) ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள்.*

**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்,**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
*2021, ஒற்றோபர் 28.*

**ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல்**

*1.* இவ்விதிகள், "*2021* ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள்" என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

*2.* இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது, திருத்தப்பட்டவாறான *1949* ஆம் ஆண்டின் *58* ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 10(இ) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் ஒன்றிணைத்து வாசிக்கப்படும் *68* ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய செயற்பட்டு, இலங்கையினுள் ஏற்றுமதிப் பெறுகைகளின் கிடைப்பனவு மற்றும் அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கை ரூபாவாக மாற்றுதல் தொடர்பில் இத்தால் விதிகளை வழங்குகின்றது.

3. பொருட்கள் மற்றும் பணிகளின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் ;

(i) இலங்கைக்கு வெளியில் ஏற்றுமதி செய்யப்படும் எல்லாப் பொருட்கள் அல்லது வழங்கப்படும் பணிகள் தொடர்பில், விடயத்திற்கேற்றவாறு, கப்பலேற்றும் அல்லது பணிகளை வழங்கும் திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களினுள் ஏற்றுமதிப் பெறுகைகளை கட்டாயமாக இலங்கையில் பெறுதல் வேண்டும், மற்றும்

(ii) கிடைக்கப்பெறுகின்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் எல்லா மற்றும் ஒவ்வொரு கிடைப்பனவின்/கிடைப்பனவுகளின் மீதும், பொருட்கள் மற்றும் பணிகளின் ஒவ்வொரு ஏற்றுமதி தொடர்பிலும் ஒவ்வொரு ஏற்றுமதிப் பெறுகைகள் மீதுமான அனைத்துத் தொடர்புடைய ஆவண ரீதியான சான்றினையும், இலங்கையில் அத்தகைய பெறுகைகளை பெறுகின்ற உரிய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிக்கு அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிக்கு (இதனகத்துப்பின்னர் "உரிமம்பெற்ற வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தாமதமின்றி உடனடியாக சமர்ப்பித்தல் வேண்டும்.

4. மேலே 3ஆம் விதியின் நியதிகளின் பிரகாரம், இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகளைப் பெறுகின்ற பொருட்கள் மற்றும் பணிகளின் ஒவ்வொரு ஏற்றுமதியாளரும், கீழே குறிப்பிடப்பட்ட **அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள்** தொடர்பில் மாத்திரம் அத்தகைய பெறுகைகளைப் பயன்படுத்தி இலங்கையில் கிடைக்கப்பெற்ற அத்தகைய ஏற்றுமதிப் பெறுகைகளின் எஞ்சியதை தொடர்ந்துவருகின்ற மாதத்தின் ஏழாவது (07 ஆவது) நாளன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை ரூபாவாக கட்டாயமாக மாற்றுதல் வேண்டும்.

(i) பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதியாளரின் நடைமுறைக் கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான வெளிமுக பணவனுப்பல்கள் ;

(ii) பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதியாளரின் பயண நோக்கத்திற்கான வெளிநாட்டு நாணயத் தாள்களின் எடுப்பனவு அல்லது நிதியங்களின் மாற்றல் ;

(iii) அத்தகைய வெளிநாட்டு நாணயக் கடன் மற்றும் வசதி, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் அல்லது திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் பணிப்புரைகளின் நியதிகளின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட கடன் பெறுகையொன்றாக இருக்கின்றவிடத்து பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியாளர்களினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களினதும் வசதிகளினதும் படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் அத்துடன் மீள்கொடுப்பனவு ;

(iv) வெளிநாட்டு நாணயத்தில் அதனுடன் தொடர்புபடுகின்ற ஒரு மாத கடமைப் பெறுப்புக்கள் உள்ளடங்கலாக அத்தகைய பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளுடன் தொடர்புபட்ட பொருட்களின் கொள்வனவுகளுக்கான அத்துடன் பணிகளைப் பெற்றுக்கொள்வதற்கான பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதியாளரினால் கொடுப்பனவுகள் ;

(v) அவ்வாறு கிடைக்கப்பெற்ற ஏற்றுமதிப் பெறுகைகளின் பத்து சதவீதம் (10%) வரை வெளிநாட்டு நாணயத்தில் இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடுகளைச் செய்வது தொடர்பிலான கொடுப்பனவுகள்.

5. மேலே 4 ஆம் விதியில் குறிப்பிடப்பட்ட அத்தகைய மாற்றல் திகதியானது மேலே 3(i) ஆம் விதியினால் வேண்டப்பட்டவாறு ஏற்றுமதிப் பெறுகைகள் இலங்கைக்குக் கிடைத்திருக்க வேண்டிய முந்திய திகதியினைவிட பிந்திய திகதியொன்றாக இருத்தலாகாது (அதாவது கப்பலேற்றல் அல்லது பணிகள் வழங்குதல் திகதியிலிருந்து நூற்றியெண்பது (180) நாட்களுக்குப் பிந்தாது).

6. மேலே 3 ஆம் விதியில் எடுத்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் இலங்கையில் ஏற்றுமதிப் பெறுகைகளின் கிடைப்பனவுகளையும் மேலே 4 ஆம் விதியில் வேண்டப்பட்டவாறு அத்தகைய பெறுகைகளின் மாற்றலையும் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் கண்டிப்பாகவும் கட்டாயமாகவும் கண்காணிப்பதற்கு வேண்டப்படுதல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பிலான அல்லது அதனுடன் இணைந்த எல்லா அவசியமான ஆவண ரீதியான சான்றினையும் எல்லா நேரங்களிலும் பேணுதலும் வேண்டும்.

7. காலத்திற்கு காலம் வேண்டப்படக்கூடியவாறு அறிக்கைகளை அத்துடன் அல்லது கூற்றுக்களை இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிப் பணிப்பாளருக்கு அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் மேலே 6 ஆம் விதியின் கீழ் பேணப்படுகின்ற பதிவுகளைப் பரிசோதிப்பதற்கு அல்லது பரீட்சிப்பதற்கும் இவ்விதிகளுடன் முழுமையாகவும் கண்டிப்பாகவும் இணங்குவதை உறுதிசெய்வதில் அத்தகைய உரிமம்பெற்ற வங்கிகளினால் எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் மீளாய்வதற்கும், விடயத்திற்கு ஏற்றவாறு ஆளுநர் அல்லது பிரதி ஆளுநரால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்கு தங்குதடையற்ற பெறுவழியினை வழங்குதல் வேண்டும்.

8. இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி திணைக்களப் பணிப்பாளர், இவ்விதிகளின் நியதிகளுக்கமைய பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதி தொடர்பில் எவரேனும் பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதியாளர் அல்லது உரிமம்பெற்ற வங்கி இவ்விதிகளுடன் இணங்காமைக்கு அல்லது இவ்விதிகளின் மீறுகைக்கெதிராக நடவடிக்கையினைத் தொடங்குவதற்கு உரிமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

9. இவ்விதிகள் செயற்பாட்டுக்கு வரும் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் எல்லா மற்றும் ஒவ்வொரு ஏற்றுமதி தொடர்பிலும் இவ்விதிகள் ஏற்புடையதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பொருட்களின் கப்பலேற்ற அல்லது பணிகள் வழங்கல் திகதியிலிருந்து நூற்றியெண்பதாவது (180 ஆவது) நாளானது இவ்விதிகள் வலுவுக்கு வந்த பின்னர் ஏதேனும் திகதியன்று வருகின்றவிடத்து, இவ்விதிகள் செயற்பாட்டுக்கு வருகின்ற திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிக்கு ஏற்புடையதாதலும் வேண்டும்.

10. ஏதேனும் சந்தேகத்தைத் தவிர்ப்பதற்கும் இவ்விதிகளின் நோக்கங்களுக்காகவும் "ஏற்றுமதிப் பெறுகைகள்" என்பது திருத்தப்பட்டவாறான 2021.02.03ஆம் திகதியிடப்பட்ட 2213/37ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (நானாவித மூலதனக் கொடுக்கல் வாங்கல் வகுப்புகள்) ஒழுங்குவிதிகளின் கீழும் நியதிகளுக்கமைவாகவும் இலங்கையினுள் அனுப்பப்பட வேண்டிய அத்தகைய பெறுகைகளையும் இலங்கைக்கு வெளியில் வதியும் ஆளொருவருக்கு தொழில்சார், வாழ்க்கைத்தொழில், தொழில் அல்லது வியாபாரப் பணிகள் உள்ளடங்கலாக வழங்கப்பட்ட பணிகளுக்காக இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் வெளிநாட்டுச் செலாவணியில் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.

11. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக, "உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்" மற்றும் "உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்" என்ற சொற்பதங்கள், திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக அவற்றிற்கு குறித்தொதுக்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

12. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக "நடைமுறைக் கொடுக்கல் வாங்கல்கள்" என்ற சொற்பதம் 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

13. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக "பயண நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயத் தாள்களின் மீளெடுப்பு அல்லது நிதியங்களின் மாற்றல்" என்ற சொற்பதம் அது சார்பில் 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளின் நியதிகளுக்கமைவானதாக இருத்தல் வேண்டும்.

14. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்டு, 2021 மாச்சு 09 ஆந் திகதியிடப்பட்ட 2218/38 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள், 2021 ஏப்பிறல் 09 ஆந் திகதியிடப்பட்ட 2222/60ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள் மற்றும் 2021, மே 28 ஆந் திகதியிடப்பட்ட 2229/9ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகளினால் திருத்தப்பட்டவாறான 2021, பெப்புருவரி 18 ஆந் திகதியிடப்பட்ட 2215/39ஆம் இலக்க வாத்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்பும் விதிகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.